VIDUT 20-1-3

# "செய்திட்ட" பயிற்சி ஏன்?

பேராசிரியர் வி பசநாயக

சுருக்கம் :- ஆசிரியரது பார்வையில் அறிவியல் ரீதியான செய்திட்ட வேலை என்பது வழமையான பாடநூல் எல்லைக்கு அப்பாற்பட்ட ஏதும் ஓர் புது விடயத்தை எடுத்துக்காட்டும் நோக்குடன் செயற்படுத்தப்படும் ஒரு திட்டத்தைக் குறிப்பதாகும். (இங்கு புதிய விடயம் என்பது எவ்வளவு சிறியதாயினும் பாடநூலில் இல்லாத ஒன்றைக் குறிப்பிடுவதாகும்) பாடநூல் கல்வியை முழுமைப்படுத்துவதும் அதன்நோக்கம். இத்திட்டத்தின் இயல்பு வழமையாக அறிவியல் சார்ந்ததாக இருப்பினும் பிறவிடயங்களை,உதாரணமாக பாடவிதானத்துடன் சம்பந்தமுள்ள தலைப்புக்களில் கலையம்ச பயிற்சிகளை உள்ளடக்குவதற்கு இடமளிக்கிறது. இவ்வேலை அறிக்கைத் தொகுப்பு நல்ல சரளமான உரை நடையில் எழுதப்பெற்று பிரசுரிப்பதற்கு அனுப்பப்படுதல் அவசியம். "செய்திட்ட" அறிக்கைகளை வெளியிடுவதற்கு சஞ்சிகைகளை அச்சேற்றும் தேவையுண்டு.

## 1 பாடநூல் அவசியம்:-

பாடவிதானம் சார்ந்த விஷயங்களை அறிவதற்கு பாடநூல்களில் உள்ளவற்றைக் கற்றல் மிக அவசியம். குறிப்பிட்டவிடயத்தில் ஆய்வு முயற்சிகள், கற்றவைகளை வாய்ப்புப் பார்த்தல் நிமித்தம் கல்விச் சுற்றுலா செய்தல், முதலிய முயற்சிகள் பாடநூல்களின் முறையான உபயோகத்தை முழுமைப்படுத்தும்.

## 2. பாடநூல்கள் எப்படியாயினும் போதுமானவையல்ல.

(அ) முழுமை: எம்து வாழ்வு முழுமையானதாக இருத்தல் வேண்டும். என நாம் கற்பனை பண்ணுகிறோம். பாடநூல்களை வாசித்து, படிப்பதில் நாம் தலைமை வகிப்பது மட்டுமல்ல இருதயமாகவும் (உணர்வாகவும்) கைகளாகவும் (செயல்களாகவும்) இருக்க வேண்டும் என நாம் எமக்கு கூறுகின்றோம் பாடநூல்களில் குறிப்பிடும் பட்டியலில் அடங்கிய சத்துக் களையும் போசாக்கு வகைளையும் பெறுவதற்கு மட்டும் நாம் உணவை உண்ணவில்லை, அதனைச்சுவைத்து மகிழ்ச்சியை அனுபவிக்கின் றோம். மருத்துவ நூல்களில் குறிப்பிட்ட நோய்கள் அற்ற சுகாதாரத்தை மட்டும் நாம் விரும்ப வில்லை. உடல் உள வாழ் வதற்காகவும், ஆத் மீக நலமாக இருக்க விரும்புகின்றோம். நாம் இயற்கைச் சூழலுடனான தொடர்புகளை மூலவளங்களை உபயோகப்படுத்துவதற்காக மட்டுமல்ல, "எல்லா உயிர் இனங்களும் சந்தோஷமாக வாழ்வதாக" என்னும் பொன்மொழியை அனுசரித்து வாழ்வதற்காகவும், பேணிவருகின்றோம். நமது உளஉணர்வுகளை பட்டியல் தயாரிக்கும் காரியத்திற்காக மட்டும் விருத்தி செய்ய விரும்பவில்லை, கலையம்ச களிப்புத் துய்ப்பதற்கு உபயோகிக்க விளைகின்றோம். எமது வேலைகளை தனிப் பௌதீக சக்தியாக மட்டும் நோக்காது ஆத்ம திருப்தியைத் தரும் ஒரு அம்சமாக நாம் பார்க்க விரும்புகின்றோம்.

(ஆ) பாடநூல் கற்கையைமுழுமையாக்குதல் பாடநூல் அறிவை முழுமையாக்க பாடசாலைகள் நமக்கு பல சந்தர்ப்பங்களை வழங்குகின்றன. சூழல் பாதுகாப்பு, நிழற்படம் எடுத்தல் போன்ற கலைத்துறை பொழுதுபோக்கு நடவடிக்கைகளை விருத்தி செய்வதற்கு பாடசாலைகளில் கழகங்கள் (சங்கங்கள்) இருப்பது சாத்தியம். இவைகள் அனைத்தும் மாணவ சமதாயம் தனியே புத்தகப் பூச்சிகளாக இல்லாது, புத்தகக் கல்வியை முழுமையாகப் பெறுவதற்கு பெரிதும் உதவி புரியும். நூற் கல்வியை முழுமை யாக்கலில் "செய்திட்டம்" ஒரு முக்கிய உருவமாகும்.

இ)**"செய்திட்டம்"** பாடநூலில், பயிற்சிக்கையேடு அல்லது மாண வர் உபயோ கப்படுத்தும் நூல் முதலியவற்றில் இல்லாத மாண வரால் செய்யப்படும் அறிவியல் ரீதியான செய்திட்டத்தையே இச் சந்தர்ப்பத்தில் "செய் திட்டம்" என நான் நோக்குகிறேன். அது வகுப்பறை பயிற்சிக்கு அப்பாற்பட்டதும் மேலானதும், அதே வேளை எல்லா மாணவர் கட்கும் பொதுவான செயல்முறையாகும். இவ் அடிப்படை உயர்வில், அறிவியல் உலகிற்கு

புதியதாக இல்லாவிட்டாலும், அது ஒரு புதிய முயற்சியாகும். மாணவர் தனியாகவோ குழுவாகவோ இணைந்து செயற்பட்டு ஒரு புதிய "பெறுபேறை" பெறுவது இப்பணியாகும். சிந்திப்பதாலும், உணர்வதாலும் அவனது அனுபவம் விரிவடைகிறது. இத்திட்டதில் ஈடுபடுவதன் விளைவாக மற்றையவர்கள் அதனையிட்டு ஆராய்ந்து, அறிந்து புரிந்து கொள்வதற்கு வழி பிறக்கிறது. இச் செய்திட்ட எழுத்து உருவம். வழமையான அறிவியல் ஆய்வுக்கட்டுரை வடிவத்தில் அமைந்திருக்கு மாயினும் அறிவியல் அடிப்படையில் அமைந்த கவி, நாடகம் போன்ற கலை வடிவத்திலும் இருக்கலாம்.

## (ஈ) எழுத்துருவில் வடித்தல்

அறிவியல் நெறிக்கு அமைவான ஒரு வடிவத்திலேயே அறிக்கைகள் எழுதப்படுதல் அவசியம், அவ்வகை அறிக்கைக்கு ஒரு "அறிவியல் ஆய்வுக் கட்டுரையே" எடுத்துக் காட்டான வடிவமாகும். ஒரு உதாரண அறிவியல் கட்டுரை: தலைப்பு, ஆசிரியர் பெயர் சுருக்கம், தொடக்க உரை, செயல்முறை தரவுகள், விளைவுகள் முடிவுரை, கலந்துரையாடல், உரை சமர்ப்பணங்கள், குறிப்பு நூல்கள், உசாத்துணை நூல்கள் முதலியவற்றை உள்ளடக்கியிருக்கும். கவி அல்லது நாடகம் போன்ற கலை வடிவங்களில் அந்த "செய்திட்டம்" எழுதப்படுமானால், அது அவற்றிற்குரிய அமைப்பு நெறியில் ஆக்கப்பட்டிருப்பது அவசியம்.

## 3. எவர் "செய்திட்ட" வேலைகளில் ஈடுபடுதல் வேண்டும்?

ஒவ்வொரு மாணவனும் என்பதே அதன் பதிலாகும். ஆரம்ப பாடசாலை, கனிஷ்ட பாடசாலை, கல்லூரி, தொழில்நுட்ப கல்லூரி, பல்கலைக்கழகம். கல்வி நிறுவனங்கள் முதலியவற்றில் கற்கும் மாணவ மாணவிகளையே ஒவ்வொரு மாணவனும் என இங்கு குறிப்பிடுகின்றேன். பல்கலைக்கழகங்களில் விஷேட பட்டப்படிப்பு மாணவர் ஒவ்வொருவரும் "செய்திட்டத்தை" செய்து, அதனை ஆய்வு அறிக்கையாக எழுதி சமர்ப்பித்தல் விதிமுறையாக இருக்கிறது. பல பல்கலைக்கழக வளாகங்களில் (ஆனால் எல்லாவற்றிலுமல்ல) தங்கள் மாணவர்களிடமிருந்து "செய்திட்ட" அறிக்கைகளை எதிர்பார்க்கின்றனர்.

தற்போதைய கல்வி சீர்த்திருத்தம். ஆரம்ப,கனிஷ்ட பாடசாலைகளில் "செய்திட்டத்தை" அறிமுகம் செய்திருக்கிறது. இத்திட்டம் உயர் கல்வி நிறுவனங்களுக்கும் பல்கலைக்கழகங்கட்கும் விரிவுபடுத்தப்படும்.

"செய்திட்ட" அறிக்கைகள் சஞ்சிகைகளில் பிரசுரிக்கப்படுமாயின் அது மாணவர்களுக்கு மிக உற்சாகம் அளிக்கும் அத்தகைய சஞ்சிகைகள் சமகாலத்தில் எதுவும் இல்லை. இலங்கை இயற்கைவள சக்தி, அறிவியல் அதிகார சபை (நரேசா) முன்னாள் தேசிய அறிவியல் நிறுவனம் முன்பு "அறிவியல் ஆய்வுகள்" என்னும் ஒரு சஞ்சிகையை, "செய்திட்ட" அறிக்கைகளை வெளிக்கொணரும் நிமித்தம், வெளியிட்டு வந்தது. ஆறு மலர்களைப் பிறப்பித்ததுடன் அது அணைந்து விட்டது. ஆரம்ப கனிஷ்ட பாடசாலை மாணவர்களின் "செய்திட்ட" அறிக்கைகளை. இலங்கை அறிவியல் கணித கல்விக்கான சங்கம் ஒரு தொடராகப் பிரசுரித்து வந்ததாயினும் அம் முயற்சியும் கூட போதுமானளவு தொடர்வதாக இல்லை.